I Commit My Spirit

Into thine hand I commit my spirit:
thou hast redeemed me, O Lord God of truth.
I have said, Lord, thou art my God:
my times are in thy hand.



என் ஆவியை

Thu 12 APR '07

31 சங்கீதம்

என் ஆவியை ஒப்புவிக்கிறேன்
கர்த்தர் கையால் என்னை மீட்டுக்கொண்டார்
என் காலத்தை ஒப்புவிக்கிறேன்
கர்த்தர் கையால் எனக்கு பெலன் கொடுத்தார்

துக்கத்தினால் நான் கலங்குகிறேன்
எனக்கு இரங்கும் கர்த்தாவே
உபத்திரவத்தால் தவிக்கின்றேன்
உம் கிருபையால் என்னைத் தாங்கிக்கொள்ளும் (என் ஆவியை)

மரித்தவனைப் போல மறக்கப்பட்டேன்
நீரே என் தேவன் என்று சொன்னேன்
உடைந்த பாத்திரத்தைப் போலானேன்
கர்த்தாவே உம்மையே நம்பியுள்ளேன் (என் ஆவியை)

என் காலங்கள் உம் கரத்திலே
துன்பத்தின் கைக்கு என்னைத் தப்புவியும்
உம் பிரகாசம் என்மேல் ஜொலிக்கட்டும்
உம் கிருபையால் என்னை இரட்சியும் (என் ஆவியை)

KJC-DNN


KJC-DNN